## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி - ஆறாம் பத்து
**(ஷரண்யனான ஸ்ரிய:பதியின் திருவடிகளிலே ப்ரேமத்தினால் சரணம் புகுதல்)**

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-1 - வைகல்பூங்கழி
**(தலைவி திருவண்வண்டூரில் உறையும் சக்ரவர்த்தித் திருமகனிடம் காதலாலே பக்ஷிகளைத் தூது விடுதல்)**

3227 * வைகல் பூங்கழிவாய் * வந்து மேயும் குருகினங்காள்! *
செய்கொள் செந்நெல் உயர் * திருவண்வண்டூர் உறையும் **
கைகொள் சக்கரத்து * என் கனிவாய் பெருமானைக் கண்டு *
கைகள் கூப்பிச் சொல்லீர் * வினையாட்டியேன் காதன்மையே 1

3228 காதல் மென்பெடையோடு * உடன் மேயும் கருநாராய்! *
வேத வேள்வி ஒலி முழங்கும் * தண் திருவண்வண்டூர் **
நாதன் ஞாலம் எல்லாம் உண்ட * நம் பெருமானைக் கண்டு *
பாதம் கை தொழுது பணியீர் * அடியேன் திறமே 2

3229 திறங்களாகி எங்கும் * செய்களூடுழல் புள்ளினங்காள்! *
சிறந்த செல்வம் மல்கு * திருவண்வண்டூர் உறையும் **
கறங்கு சக்கரக் கைக் * கனிவாய்ப் பெருமானைக் கண்டு *
இறங்கி நீர் தொழுது பணியீர் * அடியேன் இடரே 3

3230 இடரில் போகம் மூழ்கி * இணைந்தாடும் மடவன்னங்காள்! *
விடலில் வேத ஒலி முழங்கும் * தண் திருவண்வண்டூர் **
கடலில் மேனிப்[1] பிரான் * கண்ணனை நெடுமாலைக் கண்டு *
உடலம் நைந்து ஒருத்தி * உருகும் என்று உணர்த்துமினே 4

3231 உணர்த்தல் ஊடல் உணர்ந்து * உடன் மேயும் மடவன்னங்காள்! *
திணர்த்த வண்டல்கள் மேல் * சங்கு சேரும் திருவண்வண்டூர் **
புணர்த்த பூந்தண் துழாய் முடி * நம் பெருமானைக் கண்டு *
புணர்த்த கையினராய் * அடியேனுக்கும் போற்றுமினே 5

3232 போற்றி யான் இரந்தேன் * புன்னை மேல் உறை பூங்குயில்காள்! *
சேற்றில் வாளை துள்ளும் * திருவண்வண்டூர் உறையும் **
ஆற்றல் ஆழியங்கை * அமரர் பெருமானைக் கண்டு *
மாற்றம் கொண்டருளீர் * மையல் தீர்வதொரு வண்ணமே 6

3233 ஒருவண்ணம் சென்று புக்கு * எனக்கு ஒன்றுரை ஒண்கிளியே! *

[1] கடலின் மேனி/கடல மேனி

செருவொண் பூம்பொழில் சூழ் * செக்கர் வேலைத் திருவண்வண்டூர் **
கருவண்ணம் செய்யவாய் * செய்யகண் செய்யகை செய்யகால் *
செருவொண் சக்கரம் சங்கு * அடையாளம் திருந்தக் கண்டே 7

3234 திருந்தக் கண்டு எனக்கொன்று உரையாய் * ஒண்சிறுபூவாய்! *
செருந்தி ஞாழல் மகிழ் * புன்னை சூழ் தண் திருவண்வண்டூர் **
பெருந்தண் தாமரைக் கண் * பெருநீள்முடி நால்தடந்தோள் *
கருந்திண் மாமுகில் போல் * திருமேனி அடிகளையே 8

3235 அடிகள் கை தொழுது * அலர்மேல் அசையும் அன்னங்காள்! *
விடிவை சங்கொலிக்கும் * திருவண்வண்டூர் உறையும் **
கடிய மாயன் தன்னைக் * கண்ணனை நெடுமாலைக் கண்டு *
கொடிய வல்வினையேன் * திறம் கூறுமின் வேறு கொண்டே 9

3236 வேறு கொண்டு உம்மை யான் இரந்தேன் * வெறி வண்டினங்காள்! *
தேறுநீர்ப் பம்பை * வடபாலைத் திருவண்வண்டூர் **
மாறில் போரரக்கன் * மதிள் நீறெழச் செற்றுகந்த *
ஏறு சேவகனார்க்கு * என்னையும் உளள் என்மின்களே 10

3237 * மின்கொள் சேர் புரிநூல் குறளாய் * அகல் ஞாலம் கொண்ட *
வன்கள்வன் அடி மேல் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
பண்கொள் ஆயிரத்துள் இவை பத்தும் * திருவண்வண்டூர்க்கு *
இன்கொள் பாடல் வல்லார் * மதனர் மின்னிடையவர்க்கே 11

**அடிவரவு:** வைகல் காதல் திறம் இடர் உணர்த்த போற்றி ஒரு
திருந்த அடி வேறு மின்கொள் மின்னிடை